# நடப்பு நிகழ்வுகள்

பிப்ரவரி 01 :-

* ஓய்வு பெற்ற தலைமைச் செயலாளர் க. சண்முகம் தமிழக அரசின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

* தமிழக அரசின் 47 வது தலைமைச் செயலாளராக "ராஜீவ் ரஞ்சன்" இன்று பொறுப்பு ஏற்கிறார்.

* இந்தியா, ஈரான், ஆப்கானிஸ்தான் இடையே வணிகத்தை அதிகரிக்கும் நோக்கில் ஈரானில் சாபஹார் துறைமுகம் மூன்று நாடுகளும் இணைந்து கட்டமைத்து வருகின்றன.

* நாடாளுமன்றத்தில் 2020-2021 ஆம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் (பிப்ரவரி 01) இன்று தாக்கல் செய்யவுள்ளார்.

* உள்நாட்டில் தயாரிக்கப்படும் அதிக திறன் வாய்ந்த "தேஜஸ் மார்க்-2 போர் விமானம்" அடுத்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும் என்று இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

* தினமணி நாளிதழுக்கு அளிக்கப்பட்ட "தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருதை" முதல்வர் பழனிசாமி இன்று (பிப்ரவரி 01) வழங்குகிறார்.

* இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நடப்பாண்டில் 7.3% வளர்ச்சி காணும் என ஐக்கிய நாடுகள் தெரிவித்துள்ளது.

* தியாகிகள் தினம் – ஜனவரி 30 [காந்தி இறந்த தினம்]

* இந்தியாவின் முதல் "பாலின பூங்கா" (Gender Park) திறக்கப்படவுள்ள மாநிலம் – கேரளா. (கோழிக்கோடு)

* தமிழ்நாடு பாராலிம்பிக் சங்க புதிய தலைவராக சந்திர சேகர் பொறுப்பு ஏற்றுள்ளார்.

* இந்திய பாராலிம்பிக் சங்கத்தின் தலைவர் – தீபா மாலிக்

* ஆசியா – பசிபிக் தனிப்பயனாக்கப்பட்ட சுகாதார குறியீட்டில் இந்தியா 10 வது இடத்தில் உள்ளது.

* இந்தியாவில் முதல்முறையாக ஜம்மு காஷ்மீர் யூனியனில் "பனிக் குடில் உணவகம்" திறக்கப்பட்டுள்ளது.

* ICC டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் பேட்ஸ்மேன் பிரிவில் முதலிடத்தில் உள்ள வீரர் – கேன் வில்லியம்சன்

## பிப்ரவரி 02:- நடப்பு நிகழ்வுகள்

* நடப்பு ஆண்டின் தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் இன்று பிப்ரவரி 02 தொடங்குகிறது.

* இஸ்ரேல் நாட்டின் பிரதமர் – பெஞ்சமின் நெதன்யாகு

* மத்திய அரசின் தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கான வரி பகிர்வை 42 சதவீதமாக வைத்திருக்க 15 வது நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளது.

* மியான்மர் நாட்டில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அந்நாட்டின் ஆலோசகர் ஆங் சான் சூகி அதிபர் வின் மியிண்ட் கைது செய்யப்பட்டு, ஓராண்டுக்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

* சென்னையில் காணாமல் போன குழந்தைகளை மீட்க "ஆபரேஷன் ஸ்மைல்" என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

* பிரபல திரைப்பட ஒளிப்பதிவாளர் "P.S. நிவாஸ்" உடல்நலக் குறைவால் காலமானார்.

* 2021 ஆம் ஆண்டின் உலக தொழுநோய் தினம் ஜனவரி 31-ல் அனுசரிக்கப்பட்டது. கருப்பொருள் — Beat Leprosy, End Stigma and Advocate Mental Well Being

* எகிப்து நாட்டிற்கான இந்திய தூதராக அஜித் வினாயக் குப்தே நியமிக்கப்பட்டுள்ளார்.

* ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக R.S. சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

* சையது முஷ்டாக் அலி – T20 கிரிக்கெட் போட்டியில் தமிழக கிரிக்கெட் அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

* பிட் காயின் உள்ளிட்ட பல்வேறு கிரிப்டோ கரன்சிகளுக்கு தடை விதிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

* வலிப்பு நோயை முன்கூட்டியே கண்டறிந்து எச்சரிக்கை அளிக்கும் தலைக்கவசத்தை கேரள மாநிலத்தின் பேராசிரியர்கள் கண்டறிந்துள்ளனர்.

* 2020 ஆண்டிற்கான தமிழக அரசின் "இலக்கிய விருது" பெற்றவர் – அலெக்சிஸ் தேவராசு சென்னார்க் (பிரான்ஸ்).

## பிப்ரவரி 03 :- நடப்பு நிகழ்வுகள்

* உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் "தமிழ்த்தாய் - 73 தமிழாய்வு பெருவிழாவை" துணை முதல்வர் பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்.

* நாசா-வின் இடைக்கால தலைமை பணிக்குழு ஒருங்கிணைப்பு அதிகாரியாக இந்திய வம்சாவளி ஜங்கானி "பவ்யா லால்" நியமிக்கப்பட்டுள்ளார்.
* கேரளத்தின் "முதல் தாய்ப்பால் வங்கி" எர்ணாகுளத்தில் அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் K.K. ஷைலஜா பிப் 05 தொடங்கி வைக்கிறார்.

* இந்திய பத்திரிக்கையாளர்கள் சங்கத்தின் தலைவர் - L. ஆதிமூலம்.

* கல்லூரி மாணவர்களின் திறமைகள், படைப்பாற்றல் வளர்க்கும் நோக்கில் "சாரங்" என்ற கலை விழாவை சென்னை IIT நடத்துகிறது.

* சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (CPCL) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக ராஜீவ் அயிலவாழ பொறுப்பேற்றுள்ளார்.
* கணக்கு தணிக்கையாளர் (CA) தேர்வில் சேலம் மாணவர் இசக்கிராஜா அகில இந்திய அளவில் முதல் மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளார்.
* 2020 ஆம் ஆண்டின் சிறந்த ஆக்ஸ்போர்ட் இந்தி வார்த்தையாக "ஆத்மநிர்பார் பாரத்" என்ற வார்த்தை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

* 2020 ஆண்டினை UNWTO அமைப்பானது மிக மோசமான ஆண்டாக அறிவித்துள்ளது.
* இந்திய இராணுவ பணியாளர்களின் புதிய துணைத் தலைவராக சண்டி பிரசாத் மொஹந்தி பொறுப்பேற்றுள்ளார்.
* உத்தர்காண்ட் மாநிலத்தின் முதலாவது தாவரவியல் பூங்கா "சிவாலிக் ஆர்போரேட்டம்" என்ற பெயரில் திறக்கப்பட்டுள்ளது.
* இந்திய கடலோர காவல்படையின் 45வது Raising Day பிப்ரவரி 01ம் நாள் அனுசரிக்கப்பட்டது.
* மத்திய அரசின் தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கான வரிப் பகிர்வு 42 சதவீதமாக இருக்க 15வது நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளது.

பிப்ரவரி 04 :- நடப்பு நிகழ்வுகள்

* நாட்டில் மிகவும் இளம் வயதில் விமானி ஆன பெண் என்ற பெருமையை காஷ்மீரை சேர்ந்த 25 வயது ஆயிஷா அஜீஸ் பெற்றுள்ளார்.
* மத்திய அரசின் பாதுகாப்புத்துறை சார்பில் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் "ஏரோ இந்தியா" சர்வதேச விமான கண்காட்சி பெங்களூரு எலகங்காவில் தொடங்கியது.
* தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஓய்வு பெற்ற பிறகு ஓய்வூதிய ஆணையை ஓய்வு பெற்ற நாளிலேயே வழங்குவதற்கான "ப்ரயாஸ்" என்ற திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
* LIC நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக சித்தார்த்த மொஹந்தியை மத்திய அரசு நியமித்துள்ளது.
* இந்தியா - அமெரிக்கா இணைந்து மேற்கொள்ளும் கூட்டு இராணுவ பயிற்சி (யுத் அப்யாஸ்) வரும் பிப் 08ம் தேதி இராஜஸ்தானில் தொடங்குகிறது.
* மத்திய புலனாய்வு அமைப்பின் (CBI) பொறுப்பு இயக்குநராக "பிரவீண் சின்ஹா" நியமிக்கப்பட்டுள்ளார்.
* "ஹிந்துஸ்தான் வானூர்தி நிறுவனத்திடம்" இருந்து 48000 கோடியில் 83 தேஜஸ் இலகு ரக போர் விமானங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.
* GST இழப்பீட்டுத் தொகையின் 14 வது தவணையாக 6000 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. இதில் தமிழகத்துக்கு 339.78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
* டிஜிட்டல் வடிவில் பட்ஜெட் தாக்கல் செய்யும் முதல் இந்திய மாநிலம் - உத்திர பிரதேசம்.
* எட்டாவது இந்திய சர்வதேச பட்டு கண்காட்சியை மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி ராணி மெய்நிகர் போர்டல் மூலம் தொடங்கி வைத்தார்.
* 2021 ஈர நிலங்கள் தினம் — பிப்ரவரி 02, கருத்துரு — "Wetlands and Water"
* ICC அமைப்பின் "மாதத்தின் சிறந்த வீரர்" விருதை பெற்றுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் - ரிஷப் பந்த்
* ஆதரவற்ற மற்றும் வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகளை கண்டறிய புன்னகையைத் தேடி திட்டம் - தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டது.

## பிப்ரவரி 05:- நடப்பு நிகழ்வுகள்

* புனேவைச் சேர்ந்த சீரம் நிறுவனத்திடம் 110 கோடி கரோனா தடுப்பூசி வாங்க ஐ.நா சபை, யுனிசெப் ஒப்பந்தம் செய்துள்ளன.
* திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் புதிய துணை – வேந்தராக "M. செல்வம்" நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
* பெங்களூரில் பன்னாட்டு இந்திய விமானத் தொழில் கண்காட்சியின் அங்கமாக இந்தியப் பெருங்கடல் மண்டலப் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாட்டை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்.
* அமெரிக்காவுக்கான இந்திய தூதர் – தரண்ஜித் சிங் சாந்து
* சுதந்திர போராட்ட வரலாற்றின் முக்கிய நிகழ்வாக கருதப்படும் சௌரி சௌரா சம்பவத்தின் நூற்றாண்டு விழா கோரக்பூரில் பிப் 04-ல் தொடங்கியது.
* பிரதமர் மோடி தலைமையில் வரும் பிப்ரவரி 20ம் தேதி நிதி ஆயோக் நிர்வாக கவுன்சில் கூட்டம் நடைபெறவுள்ளது.
* இணையவழியில் நடைபெறும் சூதாட்டங்களுக்கு தடை விதிக்கும் சட்ட மசோதா தமிழக பேரவையில் பிப் 04ல் தாக்கல் செய்யப்பட்டது.
* மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தலைவர் நானா படோலே தனது பதவியை பிப்ரவரி 04ல் ராஜினாமா செய்தார்.
* இந்தியாவின் முதல் ஈரநில பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மையம் திறக்கப்படவுள்ள இந்திய நகரம் – சென்னை.
* இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தின் தலைவராக "அஜய் சிங்" மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
* நாட்டின் முதலாவது "Amputee Clinic" தொடங்கப்பட்ட இடம் – சண்டிகர்
* "The Little Book of Encouragement" என்ற நூலின் ஆசிரியர் – தலாய் லாமா (திபெத் ஆன்மிக தலைவர்)
* உலக புற்றுநோய் தினம் – பிப்ரவரி 04
  Theme :- I am and I will
* சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையம் தற்போது பாதியும் கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
* இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் – சுனில் அரோரா

## பிப்ரவரி 06:-   நடப்பு நிகழ்வுகள்

* நாட்டிலேயே முதன்முறையாக இடி மின்னலை ஆய்வு செய்யும் ஆய்வு செய்யும் ஆராய்ச்சி நிலையம் ஒடிசா மாநிலம் பாலாசோரில் அமையவுள்ளது.
* இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் – மிருத்யுஞ்சய் மொஹபத்ரா. (இந்தியாவின் சூறாவளி மனிதர்)
* பிரேசில் நாட்டின் அமேசானியா I உட்பட ௨௧ செயற்கைக் கோள்கள் PSLV C-51 ராக்கெட் மூலம் பிப்ரவரி ௨௮ தேதி விண்ணில் செலுத்தப்படவுள்ளது.
* முதல்முறை விண்ணப்பதாரர்களுக்கு இலவசமாக வாக்காளர் அடையாள அட்டையை வீட்டிற்கே வந்து வழங்க தபால் துறையுடன் தேர்தல் ஆணையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளது.
* கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற 16.43 லட்சம் விவசாயிகளின் கடன் தொகைத் தொகையான ரூ.12110 கோடி தள்ளுபடி செய்யப்படும் என முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார்.
* வரும் நிதியாண்டில் (௨௦௨௦-௨௧) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 10.5 சதவீத அளவுக்கு இருக்கும் என RBI கணிப்பு வெளியிட்டுள்ளது.
* புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு இந்தியா – பஹ்ரைன் நாடுகள் கூட்டாக முடிவு செய்துள்ளன.
* விழுப்புரம் மாவட்டத்தில் டாக்டர். J. ஜெயலலிதா பல்கலைக்கழகம் என்ற புதிய பல்கலைக்கழகம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
* தென் தமிழகத்தில் முதல்முறையாக திருநெல்வேலியில் மண்டல புற்றுநோய் மையம் திறக்கப்பட்டுள்ளது.
* ௨௦௨௦ ஆம் ஆண்டின் ஜனநாயக குறியீட்டில் இந்தியா 53வது இடத்தில் உள்ளது. முதலிடம் → நார்வே.
* கிராமப்புற வீடுகளில் 100% குழாய் குடிநீர் வழங்கிய Har Ghar Pani, Har Ghar Safai Mission தொடக்கப் பெற்ற இடம் – பஞ்சாப். (அமிர்தசரஸ் Dt)
* கர்நாடகா மாநிலத்தில் மண்டியா மாவட்டத்தில் 1600 டன் லித்தியம் வைப்பு இருப்பதாக அறிவித்துள்ளது.
* உலகின் முதல் "எரிசக்தி தீவு" டென்மார்க் நாட்டில் அமைக்கப்படவுள்ளது.
* தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் புதிய தலைவராக S.N. சுப்ரமணியன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிப்ரவரி 07 :- நடப்பு நிகழ்வுகள்

* மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் (CRPF) கோப்ரா கமாண்டோ படைப்பிரிவில் முதல் முறையாக பெண் கமாண்டோக்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

* கொரோனா ஊரடங்கு காலத்தில் அதிகளவு [illegible] நடந்த மாநிலங்களில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது

* குடகு மாவட்டம் மடிக்கேரியில் ஜெனரல் திம்மையா அருங்காட்சியகத்தை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

* இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பு - "மொசாட்"

* குஜராத் உயர்நீதிமன்றத்தின் 60 வது ஆண்டு வைர விழா கடந்த மே மாதம் தொடங்கி கொண்டாடப்பட்டு வருகிறது.

* இ-லோக் அதாலத் திட்டம் தற்போது 04 மாநிலங்களில் அமலில் உள்ளது.

* மின்சார வாகனங்களை மேம்படுத்துவதற்காக ~~Switch~~ "Switch Delhi" என்ற பெயரில் டெல்லி அரசு பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.

* "இ-கேபினெட்" முறையை ~~உருவாக்கிய~~ செயல்படுத்திய முதல் மாநிலம் - "இமாச்சல பிரதேசம்"

* ஆஸ்திரேலியாவின் "லோவி" நிறுவனம் வெளியிட்ட COVID-19 கொரோனா செயல்திறன் குறியீட்டில் இந்தியா 86வது இடத்தில் உள்ளது.

* அசாம் மாநிலத்தில் நெடுஞ்சாலைகளை தரம் உயர்த்த "அசாம் மாலா" திட்டத்தை தொடங்கி வைத்தவர் - பிரதமர் நரேந்திர மோடி

* அபுதாபியில் நடைபெற்ற ஃபார்முலா 3 ஆசிய சாம்பியன்ஷிப் கார் பந்தயத்தில் மூன்றாவது சுற்றில் வெற்றி பெற்ற இந்தியர் - ஜெகன் தருவாலா

* வாக்காளர்களை தொலைதூரத்தில் இருந்து வாக்களிப்பதற்கான தொழில்நுட்ப விவரங்களை ஆராய IIT சென்னையுடன் இணைந்து தேர்தல் ஆணையம் பணியாற்றி வருகிறது.

* மனித உரிமைகள் ஆணையத்தின் உத்தரவுகள் மாநில அரசைக் கட்டுப்படுத்தும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## பிப்ரவரி 08 :- நடப்பு நிகழ்வுகள்

* கோவை மேட்டுப்பாளையத்தில் 13வது யானைகள் நலவாழ்வு முகாம் இன்று தொடங்குகிறது.
* தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் (ஃபெப்சி) தலைவராக R.K. செல்வமணி இரண்டாவது முறையாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
* உடான் திட்டத்தின் கீழ் 1000 விமான வழித்தடங்களை கொண்டு வருவதே அரசின் இலக்கு என உள்நாட்டு போக்குவரத்து துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்தார்.
* முகாவா-வை மீன்வள மையமாக்க ரூ. 400 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் கிரிராஜ் சிங் தெரிவித்தார்.
* இந்தியாவின் இரண்டாவது உயரமான சிகரம் — நந்தாதேவி
* அதிக பயனாளிகளுக்கு COVID-19 தடுப்பூசியை வழங்கிய நாடுகள் பட்டியலில் இந்தியா மூன்றாம் இடம் வகிக்கிறது. 1- அமெரிக்கா - இங்கிலாந்து.
* உலகின் மிகப்பெரிய கடலோர காற்றாலைப் பண்ணை தென்கொரியா நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
* உத்தரகாண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் பிப்ரவரி 7ல் திடீரென ஏற்பட்ட பனிச்சரிவு காரணத்தால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.
* பிரதமரின் பயிர் பாதுகாப்பு திட்டத்திற்கு 2020-2021ம் நிதியாண்டில் மத்திய அரசு ரூ. 16000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.
* "ஆப்கானிஸ்தான்" நாட்டிற்கு இந்தியாவிலிருந்து "5லட்சம் கொரோனா தடுப்பூசிகள்" வழங்கப்பட்டுள்ளன.
* கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கன்டெய்னர் முனையத் திட்டம் அமைக்கும் இந்தியாவுடனான ஒப்பந்தத்தை இலங்கை ரத்து செய்துள்ளது.
* சீனாவின் இரண்டாவது கொரோனா தடுப்பூசி — கொரோனாவாக்
* ஏமன் போரில் சவுதி அரேபியாவுக்கு — அமெரிக்கா அளித்து வந்த ஆதரவை நிறுத்தியுள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

# நடப்பு நிகழ்வுகள்

## பிப்ரவரி 09:-

* நெமிலிச்சேரி – மீஞ்சூர் இடையிலான ஆறு வழித்தட பிரதான சாலையை முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்.

* கருவூலத்துறைக்கு வரும் தொகைகளை இணையம் வழியே பெறும் திட்டத்தை முதல்வர் பழனிசாமி தொடங்கி வைத்தார்.

* மேகமலை வன உயிரின சரணாலயம், ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் அணில்கள் சரணாலயம் ஆகியவற்றை இணைத்து "தமிழகத்தின் 5வது புலிகள் காப்பகமாக" ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது

* இராஜஸ்தான் மாநில மேற்கு பகுதியில் உள்ள மகாஜன் துப்பாக்கி சுடும் களத்தில் 16வது இந்திய – அமெரிக்க கூட்டு இராணுவ பயிற்சி (யுத் அபியாஸ்) பிப்ரவரி 08 ல் தொடங்கியது.

* காரைக்காலில் ரூ.2000 கோடியில் "மெகா சிட்டி" அமைக்க உள்ளதாக புதுச்சேரி முதல்வர் வே.நாராயணசாமி தெரிவித்தார்

* இந்திய கூடைப்பந்து சம்மேளனத்தின் துணைத் தலைவராக ஆதவ் அர்ஜுனா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

* இந்தியாவை சேர்ந்த கல்வி நுட்ப நிறுவனமான "பைஜூஸ்" ICC போட்டிகளுக்கான விளம்பரதாரராக 2021 – 2023 வரையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

* "மகாராஷ்டிரா" மாநில அரசு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் 3600 கோடி செலவில் பிரமாண்டமான "வீர சிவாஜி சிலை" அமைக்க திட்டமிட்டுள்ளது.

* இந்தியாவின் முதல் புவிவெப்ப மின் திட்டத்தை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் [ONGC] லடாக் [புகா கிராமம்] பகுதியில் செயல்படுத்த உள்ளது.

* உத்திர பிரதேச மாநில அரசு நில உரிமையாளர்களை சிறக்கும் வகையில் தனித்துவமான "18 Digit Unicode" திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

* உலக வர்த்தக அமைப்பின் (WTO) இயக்குநர் ஜெனரலாக தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் பெண் – ஒகோன்ஜோ இவேலா
தலைமையிடம் – ஜெனிவா

* உலகின் முதல் பொதுமக்களுக்கான விண்வெளி பயண திட்டத்தை SpaceX (USA) அறிவித்துள்ளது.

* CBI – யின் இடைக்கால இயக்குநராக பிரவீண் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

பிப்ரவரி 10 :- **நடப்பு நிகழ்வுகள்**

* இந்திய ஆன்மீகத் தலைவர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அமைதிக்கான பல்கலைக் கழகத்தால் சர்வதேச நல்லெண்ணத் தூதராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.
* கர்நாடக சட்ட மேலவைத் தலைவராக பசவராஜ் ஹொரட்டி போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.
* தமிழகத்தில் கொத்தடிமை ஒழிப்பு தொழிலாளர் ஒழிப்பு தினம் பிப்ரவரி 09-ம் அனுசரிக்கப்பட்டது.
* சென்னையை சேர்ந்த இளம் கார் பந்தய வீரரும் அழகுக் கலைஞருமான சந்தீப் குமார் 2020 டஎஃப் பார்முலா 4 நேஷனல் ரேசிங் சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.
* திருமுருக கிருபானந்த வாரியார் பிறந்த நாளை (ஆகஸ்ட் 25) அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று தமிழக முதல்வர் பழனிசாமி அறிவித்தார்.
* MGR-க்கு பொன்மனச் செம்மல் என்ற பட்டத்தை வழங்கியவர் - கிருபானந்த வாரியார்.
* இந்தியாவைச் சேர்ந்த "1.25 கோடி மக்கள்" வெளிநாடுகளில் வசிப்பதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
* ஆப்கானிஸ்தானில் லாலந்தர் அணை கட்டுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் "ஜெய்சங்கர்" கையெழுத்திட்டுள்ளார்.
* By Many a Happy Accident : Recollections of a Life என்ற புத்தகத்தின் ஆசிரியர் - முகமது ஹமீது அன்சாரி
* இந்தியாவின் முதல் தனியார் சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனம் - அக்னிபான்
* அசாமில் சாருசஜாய் ஸ்டேடியத்தில் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான 36 வது தேசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நடந்து வருகிறது.
* இந்தி திரைப்பட நடிகரும் இயக்குநருமான ராஜீவ் கபூர் காலமானார்.
* விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் தீங்கு விளைவிப்பதாக குறிப்பிடப்படும் 27 பூச்சிக்கொல்லிகளுக்கு தடை விதிக்க தொழில்துறையின் ஆட்சேபனைகளை மறு ஆய்வு செய்ய மத்திய அரசால் நியமிக்கப்பட்டவர் - "T.P ராஜேந்திரன்"

## பிப்ரவரி 11:- நடப்பு நிகழ்வுகள்

* 33 நாடுகளில் இருந்து 328 செயற்கைக் கோள்களை இந்தியா இது வரை ஏவியுள்ளது என்று மக்களவையில் மத்திய அணு சக்தி மற்றும் விண்வெளித்துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.
* சென்னை சர்வதேச திரைப்படவிழா வருகிற பிப் 18-25 வரை சென்னையில் நடைபெற உள்ளது. இதில் 53 நாடுகளில் இருந்து 91 திரைப்படங்கள் பங்கேற்க உள்ளன (18 தமிழ்த்திரைப்படங்கள்)
* போர் விமானங்களைத் தயாரிக்க ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்டும் அமெரிக்காவின் லாக் ஹீட் மார்ட்டின் நிறுவனமும் ஒப்பந்தம் செய்துள்ளது.
* டொமினிக் நாட்டின் முதல்வர் – ரூஸ்வெல்ட்
  இந்நாட்டின் மொத்த மக்கள் தொகை – 72000 பேர்.
* இந்தியாவின் முதன்மை பொருளாதார ஆலோசகர் – சஞ்சீவ் சன் யால்
* சென்னை துறைமுகம் உள்ளிட்ட 12 பெரிய துறைமுகங்களுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கும் மசோதா மாநிலங்களவையில் பிப் 10-ல் நிறைவேற்றப்பட்டது.
* 2021 ஆம் ஆண்டின் ரோட்டர்டேம் சர்வதேச திரைப்பட விழாவின் டைகர் விருது பெற்ற தமிழ்த் திரைப்படம் – கூழாங்கல்
* மத்திய பிரதேசமாநில சுகாதாரத்துறை SAANS [சான்ஸ்] என்ற நிமோனியா விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.
* தேசிய தோட்டக்கலை கண்காட்சி – 2021 பெங்களூர் நகரில் தொடங்கி வைத்தவர் – கைலாஷ் சௌத்ரி
* தமிழ்நாட்டில் புதிய 46 இணைய குற்றப்பிரிவு காவல் நிலையங்கள் திறப்பதற்கு அரசாணை வெளியிட்டுள்ளது.
* இணைய குற்றம் (சைபர் குற்றம்) அதிகம் நடைபெறும் மாநிலம் – கர்நாடகா. தமிழ்நாடு – மூன்றாமிடம்.
* உலக பருப்பு தினம் – பிப்ரவரி 10. (2019 முதல்)
  கருப்பொருள் → Nutritious Seeds for a Sustainable Future
* 2040ஆம் ஆண்டில் உலகில் மூன்றாவது மிகப்பெரிய மின் நுகர்வோராக இந்தியா உருவெடுக்கும் என்று சர்வதேச ஆற்றல் முகமை தெரிவித்துள்ளது.
* இந்தியா – நேபாளம் ஆகிய இரு நாடுகளையும் இணைக்கும் 108 K.m நீளம் கொண்ட இந்தோ – நேபாள நெடுஞ்சாலை திறக்கப்பட்டது.

பிப்ரவரி 12 :- நடப்பு நிகழ்வுகள்

* மத சிறுபான்மையினருக்கான சமூக - பொருளாதார மேம்பாட்டுக்கான தனி கழகத்தை தமிழக அரசு உருவாக்கியுள்ளது.
* ஹைதராபாத் மாநகராட்சி வரலாற்றில் முதல்முறையாக நகர மேயர், துணை மேயர் பதவிகளுக்கு பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேயர் - விஜயலட்சுமி, துணை மேயர் - ஸ்ரீலதா.
* தரையிலிருந்து 450 K.m தொலைவில் உள்ள தரை இலக்குகளைத் தாக்கி அழிக்கக் கூடிய நாசர் பாபர் ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதனை செய்தது.
* கரோனா தாக்குதலுக்கு வெளிநாடுகளில் 2072 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர் என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
* சர்வதேச பாரா தடகள கிராண்ட் ப்ரி போட்டிகள் நடைபெறும் இடம் - துபாய்.
* இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் நடைபெறவுள்ள ஜூடோ கிராண்ட்ஸ்லாம் போட்டியில் பங்கேற்பதற்காக 6 பேர் கொண்ட இந்தியக் குழு அந்நாட்டுக்குச் செல்கிறது.
* 2021-ஆம் ஆண்டிற்கான "வனவிலங்கு புகைப்படக்கலைஞர் விருது" வென்றவர் - ராபர்ட் இர்வின்
* உலக நிலையான வளர்ச்சி உச்சி மாநாடு - 2021 காணொலி மூலம் தொடங்கி வைத்தவர் - நரேந்திர மோடி
* காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட (ஈமச் சின்னங்கள்) கண்டெடுக்கப்பட்டுள்ளது.
* டெஸ்ட் கிரிக்கெட்டில் 300 விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது இந்திய வேகப்பந்து வீச்சாளர் - இஷாந்த் சர்மா
* "முக்கிய மந்திரி விஜயன் பிரதிபா பரிக்ஷா" என்ற திட்டத்திற்கு (பள்ளிக்குழந்தைகளுக்கான உதவித் தொகைத் திட்டம்) டெல்லி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
* உலக யுனானி தினம் - பிப்ரவரி 11 [ஹக்கீம் அஜ்மல் கான் பிறந்த தினம்]
* "Platform Scale; for a Post - Pandamic World" என்ற நூலின் ஆசிரியர் - சங்கீத் பால் சௌத்ரி
* இந்தியாவின் முதல் பொம்மை கண்காட்சி பிப்ரவரி 27 to மார்ச் 02 வரை மெய்நிகர் வழியாக நடைபெறவுள்ளது.
* UAE அனுப்பிய (நம்பிக்கை) ஹோப் விண்கலம் வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தை பிப்ரவரி 9-ல் சென்றடைந்தது.

பிப்ரவரி 13:- நடப்பு நிகழ்வுகள்

* இந்தியாவின் கொரோனா தடுப்பூசி ஏற்றுமதி ரூ.338 கோடியை எட்டியுள்ளதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
* சென்னையில் குப்பை குறித்து புகார் அளிக்க "பிட்டிசன்" என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
* மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பதவியேற்க உள்ளார்.
* அமைசூர் மாகாணம் "கர்நாடகா" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு – 1973
* "ஃபெமினா" இதழ் நடத்திய இந்திய அழகி போட்டியில் தெலுங்கானாவை சேர்ந்த "மானசா" "ஃபெமினா மிஸ் இந்தியா" அழகியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
* பிரிட்டனின் "பிபிசி தொலைக்காட்சி" தங்கள் நாட்டில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப சீனா தடை விதித்துள்ளது.
* அதிவேகமாகப் பரவக் கூடிய புதுவகைக் கொரோனா இலங்கையில் முதல்முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது.
* Miss India 2020 – மானசா வாரணாசி (தெலுங்கானா)
* தமிழகத்தில் இன்று 07 வது கட்ட அகழாய்வு பணிகளை முதல்வர் பழனிசாமி காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.
* கர்நாடக மாநிலத்தின் 31வது மாவட்டமாக விஜயநகரம் மாவட்டம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
* உலக பாரா தடகள போட்டியின் மகளிருக்கான நீளம் தாண்டுதல் பிரிவில் தங்கம் வென்ற இந்திய வீராங்கனை – நிமிஷா சுரேஷ்
* இந்தியாவில் நிதி எழுத்தறிவு வாரம் பிப்ரவரி 08 முதல் பிப்ரவரி 12 வரை அனுசரிக்கப்படுகிறது
* ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா மீண்டும் இணைந்துள்ளது.
* "ஜலாபிஷேகம்" என்ற நீர் பாதுகாப்பு வாரம் மத்திய பிரதேசம் மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

## பிப்ரவரி 14:- நடப்பு நிகழ்வுகள்

* 10 வது உலக வானொலி தினம் பிப்ரவரி 13ம் தேதியை உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.
* இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட தமிழகம் புதுச்சேரி உட்பட 5 மாநிலங்களுக்கு ரூ. 3113 கோடி நிதி வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
* ஐ.நா பொதுச்செயலாளர் பதவிக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த "அரோரா அகாங்ஷா" போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.
* போக்ஸியோ ஜிலம்பாக் ஓடைப் போட்டியில் பங்கேற்க இந்தியாவைச் சேர்ந்த 3 பேர் தகுதி பெற்றுள்ளனர்,
* இலங்கையில் காதலர் தினம் கொண்டாட்டங்களுக்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.
* UAE நாட்டின் முதல் செவ்வாய் கிரக திட்டமான "HOPE" செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்பாதையை வெற்றிகரமாக அடைந்துள்ளது.
* உலக [illegible] தேசிய மகளிர் தினம் — பிப்ரவரி 13 சரோஜினி நாயுடு பிறந்த தினம்
* ஆசியாவின் மிகப்பெரிய "முருகன் சிலை" கோவில்பட்டி அருகே தென்மலை அமைய உள்ளது.
* 2012-2013 ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த உடற்கல்வி ஆசிரியர் விருது பெற்றவர் - அமர்தராஜ்
* "ஒடிசா" மாநில அரசு "Covid Warriors" என்ற நினைவு சின்னம் கட்ட திட்டமிட்டுள்ளது.
* தமிழக பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதற்கு 1100 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
* "Unfinished A Memoir" என்ற நூலின் ஆசிரியர் - பிரியங்கா சோப்ரா
* தேசிய உற்பத்தித்திறன் தினம் - பிப்ரவரி 12
* தேவேந்திரகுல வேளாளர் மசோதா மக்களவையில் பிப்ரவரி 13ல் தாக்கல் செய்யப்பட்டது.

பிப்ரவரி 15:- நடப்பு நிகழ்வுகள்

* உலக அளவில் சாலை விபத்துகளால் பாதிக்கப் - படுபவர்களின் எண்ணிக்கையில் இந்தியாவின் பங்கு 10% உலக வங்கி தெரிவித்துள்ளது

* இந்தியன் வங்கியுடன் அலகாபாத் வங்கி இணைப்பு 2020 ஏப்ரல் 01 முதல் இணைக்கப்பட்டு இந்தியன் வங்கியாக செயல்படுகிறது.

* இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளில் இந்துக்கள் - 67% முஸ்லீம்கள் - 18% உள்ளனர் என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

* தமிழக கல்லூரி கல்வி இயக்குநராக பூர்ணசந்திரன் மீண்டும் பொறுப்பேற்றுள்ளார்.

* நாடு முழுவதும் சுங்கச் சாவடிகளில் "ஃபாஸ்டேக்" முறையை அமல்படுத்துவதற்கான காலக்கெடு மேலும் நீட்டிக்கப்பட மாட்டாது என மத்திய சாலைப்போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார்,

* இத்தாலி நாட்டின் புதிய பிரதமர் - "மரியோ டிராகி"

* டெஸ்ட் கிரிக்கெட்டில் 200 இடது கை பேட்ஸ்மேன்களை வீழ்த்திய முதல் பந்து வீச்சாளர் - "ரவிச்சந்திர அஸ்வின்"

* "மண்டு திருவிழா" கொண்டாடப்படும் மாநிலம் - மத்திய பிரதேசம்.

* உலகின் மிக பழமையான சுமார் 5000 ஆண்டுக்கு முற்பட்ட "மது ஆலை" - எகிப்து நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. [நார்மர் என்ற மன்னர் ஆட்சியில்]

* அமெரிக்க சேவை நிறுவனமான "அமெரிகார்ப்ஸ்" நிறுவனத்தின் மாநில மற்றும் தேசிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளியினர் - சோனாலி நிஜாவன்

* இந்தியாவில் சுங்கச் சாவடிகளில் "Fas Tag" முறை அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு - 2016

* உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன "அர்ஜீன் மார்க் 1A பீரங்கி" நாட்டுக்கு அர்ப்பணித்தவர் - நரேந்திர மோடி.

* புதுச்சேரி யூனியன் அரசு "Zero Covid" என்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.